



# க்ளார்க் காது கேளாதோர் பள்ளி




கோத்தகிரி என்னும் அந்த நலங்கனிந்த ஊரில், மூடுபனி சூழ்ந்திருக்கும் இளங்காலையில், சுழன்று சுழன்று செல்லும் மலைப்பாதையில் 10 வயதுச் சிறுமி ஒரு மருத்துவமனையை நோக்கி ஓடுகிறாள். மருத்துவமனையை அடைந்த பிறகு, அங்குள்ள நோயாளிகளின் காயங்களை சுத்தப்படுத்துவது, காயங்களுக்குக் கட்டு போடுவது, மருந்துகளை அவர்களுக்குத் தருவது போன்ற செயல்களில், தாதிமார்களுக்கு (நர்ஸஸ்) உதவி செய்கிறாள்.
இது ஏதோ ஒரு விடுமுறையின்போது செய்யப்படும் செயல் அல்ல. சேவை மனப்பான்மையினை சிறுவயதிலேயே விதைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் அந்தச் சிறுமியின் தாய் அவளுக்கு விடுத்த கட்டளை நிறைவேற்றமே இது. தினந்தோறும் நிகழ்த்தப்படும் இந்த செயலை முடித்தபிறகு, அவள் வேகமாக அடுமனையை (Bakery) நோக்கி விரைவாள். ஒரு இனிரொட்டி (Cake), இரண்டு மாச்சில்லுகள் (Biscuits) மற்றும் ஒரு கோப்பை தேநீர்-இவையே அவள் தந்தை அவளுக்கு வழங்கும் வெகுமானம். இதற்குப் பிறகு நேராகப் பள்ளி.

சிறு வயதிலே விதைத்த சேவை மனப்பான்மை எனும் விதை, நன்கு வேரூன்ற, படிக்கும் எதிராஜ் கல்லூரியில் பொதுநலச் சேவையில் செயலாளராக (Secretary of Social Service) ஆகவும், பிறகு காந்திகிராமத்தில் சமூக சேவையில் (Social Work) சிறப்பு சான்றிதழ் (Special Diploma) வாங்கவும் வைத்தது. பிறகு, 'கல்விப்படிப்பில்' (Education) முதுகலைப்பட்டம் வாங்கிய அவருக்கு, 'லிட்டில் ஃப்ளவர்' பள்ளியில் ஊனமுற்ற குழந்தைகளுடன் வேலை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. மன திடத்தையும், சிறந்த திறனையும் அந்தப் பள்ளியில் காண்பித்த பிறகு, அமெரிக்காவில் உள்ள மாஸாச்சுட்டஸ் நகரில் அமைந்துள்ள ஸ்மித் கல்லூரியில் பயிலுவதற்காக ஃபுல்ப்ரைட் உதவித்தொகை (Fulbright Scholarship) கிட்டவே, அங்கு காது கேளாதோருக்கான சிறப்புக் கல்வியில் முதுகலைப் பட்டம் பயின்றார். இவரே டாக்டர். பி. லீலாவதி, க்ளார்க் காது கேளாதோற்கான பள்ளியின் (The Clarke School For The Deaf) நிறுவனர், இயக்குனர்.

காது கேளாதோருக்கான பள்ளி ஒன்று உருவாக வேண்டும் என்ற எண்ணம் மாஸாச்சுட்டஸ் பல்கலைக்கழகத்தில் பயின்றபொழுதே அவருக்குத் தோன்றியது. சென்னைக்குத் திரும்பிய பிறகு, மறுபடி 'லிட்டில் ஃப்ளவர்' பள்ளியில் நடத்தும் அவா நிறைவேறாமல் போனாலும், சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருக்கும் குழந்தைகளோடு வேலை செய்ய ஆரம்பித்தார். இந்த முயற்சியில் அவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் இரண்டு பேர் - டாக்டர். எஸ்.கே. நடராஜன் (க்ளார்க் காது கேளாதோர் பள்ளியின் நிறுவன செயலாளர்) மற்றும் லீலாவதி அவர்களின் சகோதரர் திரு. பி.ஆர். ராஜாமணி (நிறுவன உறுப்பினர்).

இந்த சந்தர்ப்பத்தில், 'சன்டே ஸ்டான்ர்ட்' எனும் ஆங்கில நாளிதழில்,லீலாவதி அவர்களைப் பற்றிய கட்டுரை ஒன்று வெளி வந்தது. 3 வயது நிரம்பிய காது கேளாத தனது மகளுக்குக் கல்வி கற்பிப்பதற்காக ஒரு சரியான ஆசிரியை/பள்ளியைத் தேடிக் கொண்டிருந்தார் ஒரு தந்தை. அபிதா பிரபாகர் எனும் அந்தக் குழந்தையே பள்ளியின் முதல் மாணவியானாள். சில நாட்களிள், பல குறைபாடுகள் நிறைந்த இரண்டு மாணவர்கள் சேர்ந்தார்கள். அண்ணாமலைபுரத்தில் உள்ள டாக்டர்.லீலாவதியின் வீட்டில்தான் முதலில் தொடங்கியது பள்ளி. ''செய்தி பரவவே, சென்னை மட்டுமன்றி, பம்பாய், தென் ஆஃப்ரிக்கா போன்ற இடங்களிலிருந்தும் மாணாக்கர்கள் வர ஆரம்பித்தனர். வெளியூரிலிருந்து இவர்கள் வந்ததால், விடுதி வசதியின் தேவை எங்களுக்கு வேண்டியிருந்தது. மேலும், மூன்று, முப்பதாகி, எண்ணிக்கை எழுபதைத் தொடவே, இடம் பற்றவில்லை. அதனால், ஆர்.கே. சாலையில் விற்பனைக்கு இருந்த ஒரு கட்டிடத்திற்கு இடம் பெயர்ந்தோம். கட்டிடத்தை வாங்குவதற்குப் போதிய பணம் இல்லாததால், 'அது வேறு யாருக்காவது விற்கப்பட்டால், வேறு இடம் பார்த்துக்கொள்ளுகிறோம்', என்று கட்டிட சொந்தக்காரர்களிடம் உறுதி கூறினோம், என்று பழைய நினைவுகளை அசை போடுகிறார் டாக்டர். லீலாவதி.

'உனக்கு மிகவும் அவசியமான தேவை வரும்பொழுது, உலகமே ஒன்று சேர்ந்து உனக்கு அதனை அளிக்கும்' என்னும் ஆங்கிலப் பழமொழிக்கு ஏற்ப, பம்பாயிலிருந்து தனது மகளை பள்ளியில்



சேர்ப்பதற்காக அழைத்து வந்த பெண்மணி, பள்ளியின் அப்போதைய தேவையை உணர்ந்தார். தான் பணிபுரிந்துகொண்டிருந்த வங்கியாகிய ’யூனியன் வங்கி’ கடன் வழங்க உதவி புரிந்தார். இன்றுவரை, ‘யூனியன் வங்கி’ க்ளார்க் பள்ளியின் நலன்விரும்பியாகவே விளங்குகிறது. மேலும் பலரும் உபயதாரர்களாகவும் (Sponsors) உதவி புரிபவர்களாகவும் ஆக, டாக்டர். லீலாவதியின் பள்ளி, ஆசியாவிலேயே காது கேளாதோருக்காக தொடங்கப்பட்ட முதல் பள்ளி என்னும் பெருமை பெற்றது. இவர்களது நற்பணி, விழுப்புரம், பாண்டிச்சேரி, சேலம் முதலிய நகரங்களுக்கும் பரவியது. வேறு சில இடங்களிலும், பள்ளிகளை நிறுவவும், ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கவும் கோரிக்கைகள் வந்தன. சில பள்ளிகளை இப்பொழுது அரசாங்கமே ஏற்று நடத்துகின்றது. கிராமப்புரக் குழந்தைகளுக்காக சென்னைக்கு அருகே கேளம்பாக்கத்தில் ஒரு பள்ளி தொடங்கப்பட்டிருக்கிறது.

காது கேளாதோருக்கு மட்டுமன்றி, கண்பார்வையற்ற-காது கேளாதவர்கள், கற்றலுக்கான ஆற்றலில்லாதவர்கள் (Learning disabilities), மனநலம் குன்றியவர்கள் முதலிய பல குறைபாடு உடையவர்களைப் பயிற்றுவிப்பதிலும் இந்தப் பள்ளிக்கு அனுபவமும், திறனும் இருக்கின்றன. குறைபாடுகளை எதிர்கொள்ளுவதில் மிகப்பெரிய சவால் எது என்று கேட்டதற்கு, ‘‘பெற்றோர்களும், அவர்களது மனப்போக்கும்தான், ஏனென்றால், பாதிக்கப்பட்டவர்களைவிட அவர்களுக்குத்தான் பக்கவலிமையும், மதிவளத்துணையும் (Counselling) தேவைப்படுகிறது’’ என்று கூறும் டாக்டர். லீலாவதி, ‘‘குறைப்பாட்டினை விரைவாக கண்டுபிடிக்க முடிந்தால், அவர்களுக்கு ஏற்ற கற்பிக்கும் உத்தியினை வரைவதும், அதனை அவர்கள் ஏற்றுக்கொள்வதும் சுலபமாக இருக்கும். இதனால், தமது குறைப்பாட்டினை நேர்மறையாக எடுத்துக்கொண்டு, தன்னம்பிக்கையுடன் அவர்கள் வளருவார்கள்’’ என்கிறார். உதாரணத்திற்கு, 3 வயதில் பள்ளியில் சேர்ந்த அபிதா பிராபகர், பள்ளிப்படிப்பு, கல்லூரிப்படிப்பு என்று முன்னேறி தற்பொழுது, ‘ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவில்’ பணி புரியும் அளவுக்கு வந்திருக்கிறார். வயது சற்றே முதிர்ந்த குழந்தைகள், பாதுகாப்பற்ற மனநிலையுடன் வருவதால், அவர்களை சமாளிப்பது சற்று கடினம்தான். தன்னிடம் பயின்ற அனைத்து மாணவ,

**கல்லாமை நிறைந்திருக்கும் நாட்டில், பல வருடங்களாக ஊனமுற்றோருக்கு ஒரு குறியொளியாக விளங்கி, அவர்களின் கல்வித்தேவையினை உணர்ந்து, தனது பணியினை செவ்வனே செய்து வருகிறது க்ளார்க் பள்ளி. சமுதாயத்தில், ஊனத்தைப் பற்றிய மனப்பாங்கினை மாற்றவும், எது நடந்தாலும் தமது பாதையிலிருந்து மாறாமல், எதனையும் விட்டுவிடாமல் இருக்கும் மனப்போக்கை தமது மாணவர்களுக்கும் கற்றுக் கொடுத்து வருகிறது.**



மாணவிகளின் பெயர்களை நினைவில் வைத்திருக்கும் டாக்டர். லீலாவதி, யார் எங்கே பணிபுரிகிறார்கள் என்ற விவரங்களைக் கூட விரல் நுனியில் வைத்திருக்கிறார்.

படிப்பைத்தவிர, யோகா, இசை, நாட்டியம், மற்றும் பல நுண்கலைகளும் இவர்களது பாடத்திட்டத்தில் முக்கிய பங்கு வகிப்பதால், மாணவர்கள் முழுமையாக வளர்கிறார்கள். மாணவர்களின் திறனை அறிந்து அதன்படி அவர்களைப் பயிற்றுவிக்க ஆசிரியர்களுக்குக் கற்றுத் தரப்படுகிறது. சிலர், வங்கிகளில் ஏனைய பல ஊனமுற்றோர்களுக்கு 'மென் திறன்'களில் (Soft Skills)பயிற்சி அளிக்கிறார்கள். கனரா வங்கியினைச் சேர்ந்த திரு. ஈ. சதீஷ், 'காது கேளாதோர் பயிற்சி முகாம்களை' (Deaf Literacy Programmes) நாடு முழுவதும் நடத்தி வருகிறார். இந்த ஓவியரது 'ஐ ஹேவ் விஷன்' (I Have Vision) என்னும் காட்சிப் பொருட்கள் (Exhibits) பலராலும் விரும்பப்படுகிறது. 'சரியான மனப்பாங்கு (Attitude) இருந்தால், இனத உலகில் சாத்தியமில்லாதது எதுவும் இல்லை' என்று கூறும் இவர், தாம் பயிற்சி அளிக்கும் ஊனமுற்றோருக்கும் இதைனையே அறிவுறுத்துகிறார்.

இன்ஃபோசிஸ் போன்ற தனியார் நிறுவனங்களிலும், அரசாங்க உத்தியோகங்களிலும் பொறியாளர்களாக இருக்கிறார்கள் 'க்ளார்க் பள்ளி மாணவர்கள். 'எம்.ஃபில்', 'பிஎச்.டி' என்று மேற்படிப்பு படித்து நமது நாட்டிலும், அயல் நாடுகளிலும் பலர் இருக்கிறார்கள். சிலர் பள்ளிக்காகவும், மாநிலத்திற்காகவும் விளையாடும் வீரர்களாகவும் இருக்கிறார்கள். க்ளார்க் பள்ளியின் இன்னொரு சாதனை 'சாதனா நாட்டிய பிரிவு' (Sadhana Dance Division). அழகுணர்ச்சியுடன் நடனமாடும் இந்த நடனக் கலைஞர்களுக்கு, இன்னிசையையோ, தாளத்தையோ கேட்க முடியாமல் இருப்பது ஒரு குறையே இல்லை. நாராயணீ வெங்கடசுப்ரமணியன் மற்றும் லக்ஷ்மி மஹேஷ் என்ற இருவரை இந்த மாணாக்கர்களுக்கு ஏற்ற வகையில் கற்றுத்தரச் செய்து, அவர்கள் உள்ளே ஒளிந்து கொண்ட நடனமாடும் திறனை வெளிக்கொணர்ந்ததில் டாக்டர். லீலாவதியின் பங்கு மகத்தானது. புகழ்பெற்ற 'அஸ்தாட் டெபூ டான்ஸ் கம்பெனி'யை (Astad Deboo Dance Company) யை சேர்ந்த நாட்டியக் கலைஞர்களுடன், க்ளார்க் பள்ளி மாணவிகள், 20 ஆவது வருடாந்திர ஒலிம்பிக்ஸ் (20th Annual Olympics)இல் நடனமாடினார்கள். ஊனத்தைப் பொருட்படுத்தாமல், எதிர்பார்ப்புகளையெல்லாம் தாண்டி நிகழ்வொருமையுடன் ஆடும் இந்தப் பெண்கள், நமது நாட்டின் கலாசார தூதுவர்களாக பல நாடுகளுக்குச் சென்று வருகிறார்கள். ஆர். கிருத்திகா என்ற ஒரு மாணவி, தனது கணவருடன் சேர்ந்து புதுச்சேரியில் பரதநாட்டிய பள்ளி ஒன்றை நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்க இன்னொரு விஷயம்.

காது கேளாத-பார்வையற்றோர் (Deaf & Blind) மற்றும் மனநலம் குன்றிய மாணாக்கர்களுக்கு, அடிப்படைக் கல்வி தவிர, அச்சுக்கலைத் தொழில் (Printing Technology), மணிகளின் அச்சுரு கலை (Bead Craft) போன்றவற்றில் வேலைவாய்ப்பு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. ஷாஸியா ஃபாத்திமா என்ற காது கேளாத-பார்வையற்ற மாணவி, நகைகள் செய்வதில் மிகத்தேர்ந்தவர். 'அபிலிம்பிக்ஸ்' (Abiolympics) எனப்படும் தொழில்முறைத் திறனைக்காட்டும் போட்டியில் மாநிலத்தின் சார்பில் விரைவில் பங்கு பெற விருக்கிறார்.

ஊனமுற்றோருக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 'பயிற்சி வகுப்புகளையும்' க்ளார்க் பள்ளி நடத்துகிறது. பல மட்டங்களில் உள்ள ஊனத்தைப் பொருத்து, பாடத்திட்டத்தைப் புனைய ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. குழந்தைகளின் ஊனத்தின் தன்மையை கண்டு அறிய சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. செவித்துணை (Hearing Aid), செவியின் சுருள்வளை பதியவைத்தல் (Cochlear Implant) மற்றும் ஏனைய உபகரணங்கள் ஊனத்திற்கு ஏற்ப பரிந்துரைக்கப்படுகின்றன.

தங்களது குழந்தைகளை சேர்க்கவரும் பல பெற்றோர்கள், ஆசிரியர்களாக மாறி தங்களது ஊர்களில் ஊனமுற்றோர் பள்ளிகளைத் தொடங்குகிறார்கள். தடைக்கட்டுகள் எதுவும் இல்லாமல், பலவகையான ஊனங்களைப் பற்றியும், அவற்றை எதிர்கொள்ளும் உத்திகளைப்பற்றி விலாவாரியாக இந்தப் பயிற்சி வகுப்புகளில் விளக்கப்படுகிறது. கொரியா, லெபனான், மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலிருக்கும் ஆசிரியர்களுக்கு இந்தப் பள்ளி பயிற்சி அளித்திருக்கிறது.

பரிவு, செயல்திட்டம்-இந்த இரண்டு பண்புகளும் கண்டிப்பாக ஆசிரியர்களுக்குத் தேவை. ஏனென்றால், நம்பகத்தன்மை மற்றும் இடைவிடாமை-இவ்விரண்டும் இருந்தால், 'சிறப்புக் குழந்தைகள்' மிக விரைவாக எல்லாவற்றையும் பிடித்துக்கொள்ளும், என்கிறார் லீலாவதி அவர்கள்.

'யாருக்கும் மறுப்பு இல்லை' (no denial policy) என்ற கொள்கை இந்தப் பள்ளிக்கு இருப்பதால், சமுதாயத்தின் எல்லா தட்டிலும் இருக்கும், ஊனமுற்ற மாணவர்களை சேர்த்துக்கொள்கிறது - கல்வித்தரத்தில் எந்த சமரசமும் செய்து கொள்ளாமல். பள்ளிக்குக் கிடைக்கும் வருவாயில், 20 சதவிகிதம் மட்டுமே மாணவர்களிடம் நேரிடையாக கட்டணம் வாங்கப்படுகிறது. மீதமுள்ளது நலம்விரும்பிகள் மற்றும் உபயதாரர்கள் மூலம் வருகிறது. இந்தப் பள்ளிக்கென்று தனியான அறக்கட்டளை ஏதும் இல்லை.வருடாந்தர விளையாட்டு போட்டிகள், மற்றும் வேறு முகாம்களுக்கு வரும் பழைய மாணவர்களும் பணம் அளிக்கிறார்கள்.பழைய மாணாக்கர் சங்கம் (alumni association) விரைவில் தொடங்க இருக்கிறது பள்ளி.

''க்ளார்க் பள்ளியில் படித்தவர்கள், 'எச்.சி.எல்', 'இன்ஃபோசிஸ்' போன்ற நிறுவனங்களில் வேலை பார்ப்பதால், அயல்நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிமுறை படிப்பு (M.Phil, Ph.D) படிப்பதால், அரசாங்க வேலைகளில் இருப்பதால் 'ஊனம்' என்பது சமுதாயத்தில் ஒரு கறையாக இருக்கும் நிலை மாறி வருகிறது'' என்று கூறும் லீலாவதி, 'பி.எஸ்சி, எம்.சி.ஏ' படித்துவிட்டு எச்.சி.எல். டெக்னாலஜிஸில் வேலை செய்யும் வி.சி. ராஜேஷ் என்ற ஒரு பழைய மாணாக்கரை உதாரணமாகக் காட்டுகிறார்.

ஊனமுற்றோரை பரிவுடன் அணுகி, அவர்களது உள்ளாற்றலை வெளிக்கொணர உதவினால், மனிதவளம் நிறைந்து இருப்பதை நம்மால் உணரமுடியும். நம் எல்லோரையும் விட உழைத்து, பொறுப்புள்ள குடிமகனாக/குடிமகளாக இருப்பதையே அவர்கள் விரும்புகிறார்கள்.

எனினும், இடைவெளி எங்கே என்றால் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியர்கள் (Trained Teachers) மற்றும் சிறப்பு பயிற்றுநர்களின் (Special Educators) எண்ணிக்கையில் தான். நமது அரசாங்கம், 'உள்ளடங்காலான கல்விமுறைக்கு' (Inclusive Education), ஊக்கமளித்தாலும், சிறப்புக்கல்வி (Special Education) கற்பிப்பதற்கு பல பள்ளிக்கூடங்கள் இருந்தாலும், அதற்கேற்ற திறன்மிக்க ஆசிரியர்கள் இருக்கிறார்களா என்றால், அது ஒரு மிகப்பெரிய கேள்விக்குறிதான்.

கல்லாமை நிறைந்திருக்கும் நாட்டில், பல வருடங்களாக ஊனமுற்றோருக்கு ஒரு குறியொளியாக விளங்கி, அவர்களின் கல்வித்தேவையினை உணர்ந்து, தனது பணியினை செவ்வனே செய்து வருகிறது க்ளார்க் பள்ளி. சமுதாயத்தில், ஊனத்தைப் பற்றிய மனப்பாங்கினை மாற்றவும், எது நடந்தாலும் தமது பாதையிலிருந்து மாறாமல், எதனையும் விட்டுவிடாமல் இருக்கும் மனப்போக்கை தமது மாணவர்களுக்கும் கற்றுக் கொடுத்து வருகிறது.

கணினிகளை மாற்றுப் பயிற்றுமொழியாக தமது வகுப்பறைகளில் முதன்முறையாகக் கொண்டுவந்ததைத் தவிர, சென்னைவாசிகள் பயன்பெற எல்லா மாணவர்களுக்கும் குறைந்த கட்டணத்தில் பேருந்து/ரயிலில் செல்வதற்கு சலுகை சீட்டுகள் வழங்குமாறு மாநகராட்சிக்குக் கோரிக்கை வைத்து, அதில் வெற்றியும் கண்டிருக்கிறது. இதைப்போல பலரும் அறியாத பல சாதனைகளைச் செய்து, சென்னை மாநகரத்தை 'மாணவ-நட்பு' நகரமாகவும், 'ஊனமுற்றோர்-நட்பு' நகரமாகவும் ஆக்கியதில் 'க்ளார்க் பள்ளி'யின் பங்கு மகத்தானது. 'க்ளார்க் காது கேளாதோர் பள்ளி'- சென்னையின் முதன்மை சான்ற நிலையம்!